மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேள்வி, அங்கிருக்கிற வீடுகளை அப்புறப்படுத்துகின்ற பிரச்சினையைப் பற்றியது. இதைப்பற்றி நடவடிக்கை எடுத்திருப்பதாக நான் குறிப்பிட்டிருக்கிறேன். பால வேலைகளைப்பற்றி காலதாமதம் ஏற்பட்டதாகக் குறிப்பில்லை. எனவே, தனியாகக் கேள்வி கேட்க வேண்டுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், பொதுவாக, இந்த மேம்பால வேலைகளைக் காண்டிராக்ட்டுக்கு விடுகின்ற அந்த நேரத்தில் சரியான, ரீதியான, சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு காண்ட்ராக்ட்டுகள் விடப்படாத காரணத்தினாலே, சில மேம்பாலங்கள் அப்படியே விழக்கூடிய காட்சி, பரவலாக, கோயம்புத்தூரிலே நடந்திருக்கிறது. ஆகவே, இம்மாதிரியான சம்பவங்களைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? ஏன் அப்படி விழவேண்டும்? இதற்கெல்லாம் என்ன காரணம்? இதை ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு வேலையை டெண்டர் விடும்பொழுது குறிப்பிட்ட கண்டிஷன்கள் இருக்கின்றன, அந்த கன்டிஷன்களின் அடிப்படையிலேதான் டெண்டர் விடவேண்டும் அந்த கண்டிஷன்கள்படிதான் டெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. கோயம்புத்தூருக்குப் பக்கத்திலே உள்ள வேலையைப் பொறுத்தவரையிலும் கூட கண்டிஷன்களின்படிதான் டெண்டர்கள் கேட்கப்பட்டன, லோயஸ்ட் டெண்டர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பாராத வேளையிலே அப்படி ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி தலைமைப் பொறியாளரிடம் அறிக்கை கேட்டிருக்கிறோம். அவரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : அந்த மேம்பாலம் கட்டுவதற்காக அங்கேயுள்ள இரயில்வே பாதை செல்கிற இடத்தில் பாலம் கட்டுவதற்காக கடந்த இரண்டாண்டுக் காலமாகவே ரயில்வே இலாகாவே உத்திரவு வழங்காத காரணத்தினால் இன்னும் அந்த வேலை தொடங்கப்படாமல் இருக்கிறது, என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த வேலையை உடனடியாக தொடங்கக்கூடிய முறையிலே ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதிலே இரயில்வே இலாகா ஒத்துழைப்புக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி தலைமைப் பொறியாளர் அவர்கள் இரயில்வே இலாகாவோடு தொடர்புகொண்டு ஒத்துழைப்பைப் பெற முயற்சிசெய்து வருகிறார்கள்.

ஹாஜ் பயணிகள்.

* 58—வினா : திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழகத்தில் இருந்து புனித ஹாஜ் பிரயாணம் செய்யும் முஸ்லீம்களுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) அண்ட் (இ): மாநில ஹாஜ் பயணக் குழுவின் செயலராக உள்ள நகர காவல்துறை ஆணையினருக்கு மத்திய அரசிடமிருந்து ஹாஜ் பயணத்திற்காக பயணிகளின் உதவியாளரை தேர்ந்தெடுப்பதுபற்றி கடிதம் ஒன்று வந்துள்ளது. அந்தக் கடிதத்தைத் தொடர்ந்து ஒரு உதவியாளர், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் பீர் முஹம்மது அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. எ. வகாப்: இந்த வசதிகளைச் செய்து தந்திருக்கிற தமிழக அரசுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இஸ்லாமியரின் ஐம்பெரும் கடமைகளை ஆற்றுவதற்காக ஹாஜ் பயணம் போவதற்கு பல பேர்கள் விரும்புகிறார்கள், ஆனால் சில பேர்களுக்குத்தான் அனுமதி கிடைக்கிறது. மத்திய அரசாங்கத்திடம் சொல்லி வற்புறுத்தி அதிகமான பேர்களை அனுப்புவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? மக்கா நகரத்திற்குப் போவதற்கு உதவியாளர் நியமிக்கப்பட்டிருப்பதைப் போல பம்பாய்க்கு இங்கிருந்து செல்கின்ற பயணிகளுக்கு உதவி செய்வதற்காக அங்கேயும் ஒரு உதவியாளரை நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? மக்கா நகரத்திலே ஹாஜ் பயணிகள் தங்குவதற்காக இடவசதிகளையும் மற்ற வசதிகளையும் செய்து கொடுப்பதற்கும் நம்முடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு மூன்று கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். முதலாவதாக ஹாஜ் பயணிகள் எவ்வளவு பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை மத்திய அரசாங்கந்தான் கவனித்து வருகிறது. அது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலேதான் இருக்கிறது. நாங்கள் தொடர்ந்து அதிகமான அளவிற்கு தமிழ்நாட்டிலிருந்து அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். அடுத்ததாக பம்பாயிலே ஒரு அதிகாரி நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே இருந்து செல்கின்றவர்களுக்கு மக்காவில் ஒரு விடுதி உள்ளதா என்று கேட்டார்கள். பிரின்ஸ் ஆஃப் ஆற்காடுக்குச் சொந்தமான ஒரு விடுதி அங்கே இருக்கிறது. அதை புதுப்பிப்பதற்காக ஒரு அறிக்கையை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி ஒரு வருட காலம் ஆகிறது. பதிலை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். ஒரு வாரத்திற்கு முன்புகூட மத்திய அரசை வற்புறுத்தி மீண்டும் எழுதியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: நம்முடைய மாநிலத்திலே ஹாஜ் கமிட்டி என்று ஏதேனும் ஒன்று இருக்கிறதா? அப்படி இருக்குமானால் அதற்கு உறுப்பினர்கள் எந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? தமிழ் நாட்டிலிருந்து செல்கின்ற பயணிகளுக்குப் போதுமான வசதிகள் இல்லாத நிலைமையைப் போக்குவதற்கு அரசு என்ன என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாட்டில் ஹாஜ் கமிட்டி என்ற ஒரு கமிட்டி இருக்கிறது. ஆனால் தற்போது அதற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை. முஸ்லீம் லீக் தலைவரைக் கலந்து கொண்டு நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். புனித கடமைகளை நிறைவேற்றவும், அவ்வப்பொழுது பயணிகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்துவதற்கும் மத்திய அரசாங்கத்திடம் நாம் கேட்டு வருகிறோம். மக்கா நகரத்திலே வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக மத்திய அரசாங்கத் தூதுவர் மூலமாக நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நமது மாநிலத்தின் சார்பாக ஒரு உதவியாளரை அனுப்பிவைக்கிறோம். அந்த முறையில் இப்பொழுது முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. பீர் முஹம்மது அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள் என்று சொன்னார்கள். இப்படித் துணையாளரை அனுப்புவது எந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படு கிறார்கள்? சென்ற ஆண்டு யார் அனுப்பப்பட்டார்கள்? அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏதாவது வழிமுறைகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஹாஜ் பயணிகளின் வசதிக் காக உடன் அனுப்பப்பெறும் காதிம் உல்-ஹஜ்ஜாஸ் (Khaddim-ul-Haj) என்ற பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர் கீழ்க்கண்ட அம்சங்களுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும் :—

(அ) ஐம்பது வயதிற்கு மேற்படாமல் நல்ல உடல் வசதியோடு பெரிய கூட்டங்களைச் சமாளித்து அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஐ.ஏ.எஸ். போன்ற உயர் அதிகாரியாகவோ சட்டமன்ற உறுப்பி னர் போன்ற அரசியல் தலைவராகவோ மாநில ஹாஜ் குழு உறுப்பின ராகவோ இருத்தல் கூடாது, சுறுசுறுப்பாக சமூக சேவை செய்யக்கூடிய வராக இருத்தல் நலம்.

(இ) அவர் சவூதி அரேபியாவுக்கும் தன் குடும்பத்தினர் எவரையும் கூட அழைத்துச் செல்லாமல் முற்றும் இந்த சேவைக்காகவே செல்ல வேண்டும்.

(ஈ) மோ ஆலிம் பற்றிய தொடர்-போ அது சம்பந்தப்பட்ட சலுகை கள் ஏதும் அவர் பெறக்கூடாது.

(உ) முன்பு ஹாஜ் பயணம் செய்து அந்த அனுபவம் காரணமாக பயணிகளின் நலனை கவனிக்க ஏற்றவராக இருத்தல் வேண்டும்.

(ஊ) இந்த நோக்கத்தின் பொருட்டு அவர் முந்திய 5 ஆண்டுகளில் ஹாஜ் பயணம் செய்திருந்தால் இந்தப் பணி ஏற்கத் தடை இல்லை.

(எ) கப்பலில் அவர் மேல்தளத்தில் மற்ற சாதாரணப் பயணிகளுக் குள்ள பயணத்தை மேற்கொண்டு அவர்களது வசதிகளை கப்பலிலும் சவூதி அரேபியாவிலும் கவனிக்க ஏற்றவராயிருத்தல் வேண்டும்.

(ஏ) அவர் ஜெட்டாவிற்கு செல்லும்போது அவரது மாநிலத்தை சேர்ந்த பயணிகள் நிறைந்த கப்பலிலோ அல்லது அதற்கு அடுத்த கப்பலிலோ பயணம் செய்து அவரது பொறுப்பிலுள்ள பயணிகளுக்கு ஜெட்டா போய் சேரும்போது அறிமுகமானவராயிருத்தல் வேண்டும்.

நான் சவூதி அரேபியாவிலே கேட்டபொழுது சொன்னார்கள். வேறு மாநிலங்களிலிருந்து ஹாஜ் கமிட்டி உறுப்பினர்கள் வந்ததாகவும் வேறு சில மாநிலங்களிலிருந்து சில அமைச்சர்கள் வந்ததாகவும் அது விதி முறைகளுக்குட் பட்டதல்ல என்ற கருத்தினைத்தையும் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஹாஜ் பயணிகள் சென்ற கப்பல் நடுக் கடலில் நிறுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டு அதன் காரணத்தினால் சிலர் இறக்கப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா? அதுபற்றி செய்தி வந்திருக் கிறதா? வந்திருந்தால் என்ன நடவடிக்கை அதுகுறித்து எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய முழு விவரம் என்னிடத்தில் இல்லை. அதுபற்றி செய்தி வந்து பயணிகளுக்கு தக்க இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஹாஜ்ஜுக்கு செல்ல நியமித்து இருக்கிறார்களா? எம்.எல்.ஏ.-க் களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும் அவர்களை சேர்த்துக் கொள்வதற்கு பரிவுரை செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஹாஜ்ஜுக்கு வாலண்ட்ரியாக போகலாம், நான் ஹாஜ்க்கு போகாவிட்டாலும் மக்கா நகரம் போய் வந்திருக்கிறேன். ஹாஜ் கடன் நிறைவேற்றாமலும் போய்வரலாம்.

மாயூரத்தில் அம்பர் சர்க்கா விற்பனை.

*59 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் கதர் கிராம வாரிய அலுவலகத்தில் அம்பர் சர்க்கா ராட்டைகள் எவ்வளவு தேங்கிக் கிடக்கின்றது?

(இ) அரசு அதுபற்றி மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஒன்றுமில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.